**Tsi10T**

**தென்காசி மாவட்டம்**

**காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2025**

**வகுப்பு 10**

**தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 15x1=15**

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது -
அ) குலைப்பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை
இ) கிளைப்பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை

2. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய
இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது –
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4. 'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்' என்று குறிப்பிடும் நூல் -
அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை இ) திருக்குறள் ஈ) நற்றிணை

5. தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல் -
அ) இட வழு ஆ) கால வழு இ) மரபு வழு ஈ) விடை வழு

6. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| | |
|---|---|
| அ) செங்காந்தள் | 1) வினைத்தொகை |
| ஆ) வீசுதென்றல் | 2) உவமைத்தொகை |
| இ) மதுரை சென்றார் | 3) பண்புத்தொகை |
| ஈ) மலர்க்கை | 4) வேற்றுமைத்தொகை |

அ) அ-4, ஆ-3, இ-1, ஈ-2 ஆ) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 இ) அ-4, ஆ-3, இ-2, ஈ-1 ஈ) அ-3, ஆ-4, இ-1, ஈ-2

7. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

8. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை -
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

9. "உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தாலும் புளிக்காத பால்!
தந்தை தந்த தாய்ப்பால் முப்பால்!" எனத் திருக்குறள் பற்றிக் கூறும் கவிஞர்
அ) கண்ணதாசன் ஆ) நாகூர்ரூமி இ) அறிவுமதி ஈ) கல்யாண்ஜி

10. உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது -
அ) இட வழுவமைதி ஆ) பால் வழுவமைதி
இ) திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி

11. இரவீந்திரநாத தாகூர்.......... மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ............. மொழியில் மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது.
அ) ஆங்கில, வங்காள ஆ) வங்காள, ஆங்கில
இ) வங்காள, தெலுங்கு ஈ) தெலுங்கு, ஆங்கில

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"செம்பொ னடிச்சிறு கிங்கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாட"

12. பாடலின் இலக்கிய வகை
அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம் இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

13. 'கிண்கிணி' என்னும் அணிகலன்
அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது
இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

14. குண்டலமும் குழைக்காதும் - இலக்கணக் குறிப்பு தருக
அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத் தொகை ஈ) வினைத்தொகை

15. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.
அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன்; பைம்பொன்
இ) கலந்தாட, சரிந்தாட ஈ) வடமாட, பதிந்தாட

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க
அ. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் உணவும் கொடுத்தனர்.
ஆ) உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம்பெற்றுள்ளது.
17. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
18. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.
19. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.
20. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது?
21. "ஒரு செயல் முடிப்பதற்கு இயலாது என்று எண்ணிச் சோர்வடையாமல் முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்" என்னும் பொருள் அமைந்த திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10

22. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.
23. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
ஆ. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
24. கொடுக்கப்பட்ட இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) கொடு – கோடு ஆ) விதி – வீதி
25. கலைச்சொற்கள் தருக. அ) Baby shower ஆ) Multi media
26. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?
27. பழமொழிகளை நிறைவு செய்க. அ) அளவுக்கு ………… ஆ) உப்பிட்டவரை………………..
28. 'அமர்ந்தான்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க** 2x3=6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. 'தனித்து உண்ணாமை' என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாக அமைந்தது. இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைப் பட்டியலிடுக.

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலக்கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம்.

அ) உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்தவர்கள் யாவர்?

ஆ) வாழை இலையின் விரிந்த பகுதி எப்பக்கத்தில் வர வேண்டும்?

இ) நாம் எவ்வாறு உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க** 2x3=6

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

33. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"மாற்றம் எனது" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

(அல்லது)

"விருந்தினனாக" எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க** 2x3=6

35. ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. 'வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

37. **அலகிட்டு வாய்பாடு தருக.**
அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** 5x5=25

38. அ) "மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே!"

-கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

(அல்லது)


ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) **உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி, பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக.**

(அல்லது)

ஆ) மருந்தகம் ஒன்றில் வழங்கப்பட்ட மருந்து பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீங்கள் மருந்தகம் மீது நடவடிக்கை எடுக்குமாறு உரிய சான்றுகளுடன் சுகாதாரத்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. வீட்டு எண்.54, குறிஞ்சிநகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் அன்பரசனின் மகள் நிறைமதிக்காக, கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) **பள்ளியிலும் வீட்டிலும் உன் செயல்களை அட்டவணைப்படுத்துக.**

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன் |
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |

(அல்லது)

*மொழிபெயர்க்க.*

Translation is an art in itself. No one can do that. A translator should be neutral and not attached to any language. Specifically, he should be proficient in both the languages i.e. both the language and the source language. They should be familiar with the social and cultural conditions of both the languages.

பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க** **3x8=24**

43. அ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிற துறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - இக்குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

44. அ) **புயலிலே ஒரு தோணி** கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் **கோபல்லபுரத்து மக்கள்** கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை – தமிழக எல்லை – தமிழன்னை – சான்றோர் வளர்த்த தமிழ் - முடிவுரை.

(அல்லது)

ஆ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு – சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

*****